Department Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்
வாராந்த பாடசாலை

பாடம் : சித்திரம்

வாரம் : ஜனவரி 03

தரம் : 09

தொகுப்பு : செல்வி.S.லுக்ஷனி
இ/நிவி/ஹவுப்பே த.வி

**தேர்ச்சி** : **பயன்பாட்டுத் தேவைகளுக்காக நிர்மாணிப்புக்களில் ஈடுபடுவார்.**

**தேர்ச்சி மட்டம்** : **தாவர, விலங்கு வகைகளுக்குரிய பாரம்பரிய அலங்கார வேலைப்பாடுகளின் அவற்றின் வர்ணங்களையும் கற்பார்.எண்ணக்கருக்களையும்**

**செயற்பாடு** : **'வேலைப்பாடுகள் மிக்க குடை"**

**ஒப்படை** : **பின்வரும் அறிவுறுத்தல்களை பின்பற்றுக.**

01. பல்வேறு அலங்காரங்களைக் கொண்ட குடைகள் சிலவற்றை பார்வையிடுங்கள். அவற்றில் இடப்பட்டுள்ள வேலைப்பாடுகள் தொடர்பாக நன்கு அவதானியுங்கள்.

02. அக் குடைகள் ஒவ்வொன்றிலும் காணப்படும் சமமான 8 பகுதிகள், குடைத் துணியை அங்கரிக்க பாரம்பரிய ஓவியங்களில் இடப்பட்டிருக்கும் மலர் வடிவங்கள், பொருளுக்கும் ஊடகத்துக்கும் பொருத்தமான நிறப் பிரயோகம் போன்றன தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்க.

03. கேத்திரக்கணித உபகரணங்களைப் பயன்படுத்தி வட்டமொன்றினை வரைந்துக்கொள்க. அதனை 8 சம துண்டுகளாக பிரித்துக் கொள்க.

04 நீங்கள் பிரித்து வைத்துள்ள 8 துண்டுகளில் ஒரு முக்கோண பகுதிக்கு மாத்திரம் நீர் விரும்பிய தெரிவு செய்யப்பட்ட மலர் அலங்காரத்தினை வரைந்துக் கொள்க. அதனை சுவட்டு பிரதித் தாளுக்கு பெற்றுக்கொண்டு ஏனைய முக்கோண பகுதிகளுக்கு அச்சிட்டுக் கொள்க.

05 மேற்கூறப்பட்ட 1,2,3,4 படிமுறையில் பெற்றுக்கொண்ட அவதானத்தின் பின்னர் முழுமையான குடை வடிவமொன்றினை உம்மால் பெற்றுக் கொள்ள முடியும். அதனை பொருத்தமான வர்ணங்களை பயன்படுத்தி நிறந்தீட்டுக.